# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 12,187 — 1960 අගෝස්තු 26 වැනි සිකුරාදා — 26.8.1960

12,187 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)—பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### பயணக் கூலிச் சபை

சமூகமாயிருப்பவர்கள் : திரு. பி. ஓ. பர்ணண்டோ, தலைவர்

திரு. கே. சச்சிதானந்தா, பயனக்கூலிச்சபை அங்கத்தவர்

திரு. பி. டி. அபயபாலா, பயணக்கூலிச்சபை அங்கத்தவர்

திரு. டி. ஜி. பி. றணசிங்க, பயணக்கூலிச்சபை அங்கத்தவர்

திரு. எஸ். எஸ். எச். சில்வா, பயணக்கூலிச்சபை அங்கத்தவர்.

1957 ம் ஆண்டின் 48 ம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சட்டம்

1959 ம் ஆண்டின் 1 ம் இலக்க பயணக்கூலித் திட்டத்தை அங்கீகரிக்க வேண்டி, இலங்கைப் போக்குவரத்துச் சபை தாக்கல்செய்த மனு விடயமாக.

### இடைக்கால முடிபு

1. இலங்கைப் போக்குவரத்துச் சபை தயாரித்த திட்டத்தை நாங்கள் அங்கீகரிக்க வில்லை.

2. இணைப்பு " A " ல் காணும் திருத்தப்பெற்ற திட்டத்தை நாங்கள் அங்கீகரிக்கத் தயாராயிருக்கிறோம்.

3. தற்பொழுது இலங்கைப் போக்குவரத்துச் சபையால், பிரயாணி ஒருவருக்கு மலை நாட்டுப் பகுதிகளில் மைல் ஒன்றுக்கு 4 சத வீதமாகவும், மலைநாடு தவிர்ந்த மற்றைய பகுதிகளில் மைல் ஒன்றுக்கு 5 சத வீதமாகவும் அளிக்கப்படும் சேவைகள் உள்ள பாதைகள் எல்லாவற்றிற்கும், உச்சப்பயணக் கூலி அட்டவணை ஒன்றை, இலங்கைப் போக்குவரத்துச் சபை கூடிய விரைவில் தயாரித்து, பயணக் கூலிச் சபைச் செயலாளருக்குச் சமர்ப்பிக்க வேண்டும்.

இப்பயணக் கூலி அட்டவணைகள், இலங்கைப் போக்குவரத்துச் சபையிடமிருந்து கிடைக்கப்பெற்றதும், இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்படவேண்டும். இப்பயணக் கூலி அட்டவணைகளுக்குள்ள ஆட்சேபனைகளை :

(அ) இலங்கைத் தேசிய சேவை மந்திரியின் அங்கீகாரம் பெற்ற சங்கங்களும் ;

(ஆ) தங்கள் தங்கள் ஆட்சி எல்லைக்குள், முழுதாகவேனும், அல்லது பகுதியாகவேனும் பஸ் சேவைகள் அளிக்கப்பெற்றுள்ள உள்ளூராட்சி அதிகார ஸ்தாபனங்களும், தெரியப்படுத்தலாம்.

4. இலங்கைப் போக்குவரத்துச் சபை கீழ்க்காணும் விடயங்களைக் காட்டுகின்ற ஒரு கூற்றை பயணக்கூலிச் சபைச் செயலாளருக்கு அனுப்பினால், பலவின சேவைகளையும், வசதிகளையும் பற்றி, எங்களால் குறிக்கப்பட்ட உச்ச வீதங்களை நாங்கள் திரும்பவும் ஆலோசிக்கத் தயாராயிருக்கிறோம் :—

(அ) இச் சேவைகளுக்கும், வசதிகளுக்கும், தற்போது அறவிடப்படும் கட்டணங்கள்.

(ஆ) இச் சேவைகளுக்கும், வசதிகளுக்கும் அறவிட வேண்டிய நியாயமான தொகை என இலங்கைப் போக்குவரத்துச் சபை கருதுகின்ற கட்டணங்கள்.

5. இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் இவ் இடைக்கால முடிபு வெளியிடப்படும் திகதியிலிருந்து மூன்று வாரங்களுள் இம் முடிபு பற்றிய விடயங்களுள் ஏதாவது பற்றி இலங்கைப் போக்குவரத்துச் சபையோ அன்றி அதிகாரம்பெற்ற தடையாளரோ எழுத்துமூலம் கொடுக்கும் முறைப்பாடுகளை நாங்கள் ஆலோசனை செய்வோம்.

6. இம் முடிபுகள் இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிலும், கீழ்க்காணும் பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட வேண்டும்.

(அ) இலங்கை டெயிலி நியூஸ்.
(ஆ) இலங்கை ஒப்சேவர்.
(இ) டைம்ஸ் ஒவ் சிலோன்.
(ஈ) தினமின.
(உ) ஜனதா.
(ஊ) லங்காதீப.
(எ) வீரகேசரி.
(ஏ) தினகரன்.

7. நாங்கள், தேவையென்றால், பகிரங்க விசாரணையைத் திரும்பவும் எடுத்துக் கொள்வோம். திரும்ப எடுத்துக் கொள்ளப்படும் பகிரங்க விசாரணையின்போது, இலங்கைப் போக்குவரத்துச் சபையால் தயாரிக்கப்பட்ட பயணக்கூலி அட்டவணைகள் பற்றிய முறைப்பாடுகளைத் தவிர வேறு எந்த விடயம் பற்றிய முறைப்பாடுகளையும் நாங்கள் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளமாட்டோம்.

சாம். எச். சில்வா,
(செயலாளர்),
கொழும்பு 5,
1960 ம் ஆண்டு ஆவணி மீ 16 ந் உ.

பி. ஓ. பர்ணண்டோ, தலைவர்.
கே. சச்சிதானந்தா (அங்கத்தவர்).
டி. ஜி. பி. றணசிங்க (அங்கத்தவர்).

## இணைப்பு ‘A’

### இலங்கைப் போக்குவரத்துச் சபை—1959 ம் ஆண்டின் 1 ம் இலக்க பயணக்கூலித் திட்டம்

### பகுதி I

#### எடுத்துக்காட்டும் பொருள்கோடலும்

**1. எடுத்துக்காட்டு**

இந்தத் திட்டம் 1959 ம் ஆண்டின் 1 ம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சபைப் பயணக்கூலித் திட்டம் என எடுத்துக்காட்டுக.

**2. பொருள் கோடல்**

இத் திட்டத்தில், பின்வரும் சொற்றொடர்கள், வேறு தொடர்புடன் விளங்கிக் கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களைத் தவிர, அவைகளுக்கென இத்தால் கொடுக்கப்பட்டிருக்கும் அர்த்தங்களை ஏற்கும் :

“ சபை ” : இலங்கைப் போக்குவரத்துச் சபையைக் கருதும்.

“ நிபந்தனைகள் ” : விதிகளும் உள்பட்டனவாயிருக்கும்.

“ ஒப்பந்தக் கேள்வு ” : 1951 ம் ஆண்டின் 14 ம் இலக்க மோர்ட்டார் போக்குவரத்து அதிகாரச் சட்டத்தின் 48(2) ம் பிரிவில் உள்ள “இடையிடை நிகழ் சேவை ” என்பதன் அர்த்தத்தை ஏற்கும்.

“ பயணக்கூலிக்கட்டம் ” : ஒரு பயணக்கூலிக்கட்டக் குறிநிலைக்கும் அதை அடுத்து முன்போ, பின்போ உள்ள பயணக் கூலிக்கட்டக் குறிநிலைக்கும் உள்ள இடைத்தூரம்.

“ பயணக் கூலிக் கட்டக்குறிநிலை ” : இத்திட்டத்தின் 10 வது பந்தியின் கீழ் சபையால் தீர்மானிக்கப்பட்ட குறிநிலை.

“ சாதாரண பயணப் பொதி ”: ஒரு பிரயாணியோடு சம்பந்தப்பட்ட, மற்றைய பிரயாணிகளுக்கு வசதியீனமளிக்காத, சிறு சிப்பம், பொருள், வாத்தியம், கருவி, அல்லது பிரயாணி தானே கையில் எடுத்துச் செல்லக்கூடிய வேறு பொருளையும் உள்படுத்தும்.

“ பாதை ” : இலங்கைப் போக்குவரத்துச் சபையால் அளிக்கப்படும் பஸ்சேவைகளுள்ள பெருந்தெருவின் எந்த ஒரு பகுதியும்.

“ பருவச்சீட்டு ” : இதை உடையவர் ஒரு குறித்த கால எல்லைக்குள், ஒரு குறிக்கப்பட்ட பாதையிலுள்ள இரண்டு பயணக் கூலிக் கட்டக் குறிநிலைகளுக்கிடையில், குறித்த தொகைப் பிரயாணங்களைச் செய்வதற்கு உரிமையளிக்கும் சீட்டு.

2. இலங்கைச் சட்டவாக்கங்களின் பொருள் கோடற் கட்டளைச் சட்டத்தின் I ம் பகுதியிலுள்ள 2 ம் அதிகாரம், ஒரு பாராளுமன்றச் சட்டம் போன்று இத் திட்டத்திற்குப் பொருந்தும்.

### பகுதி II

#### பிரயாணிகளை ஏற்றிச் செல்லல்

**3. அதி உயர்ந்த ஒற்றைப் பயணக்கூலி.**

(1) இத் திட்டத்தின் 4 ம், 5 ம் பந்தியில் கூறப்பட்ட நிபந்தனைகளுக்கமைய, இத் திட்டத்தின் 1 ம் அட்டவணையின்படி ஒப்பந்தக் கேள்வில் ஏற்றிச் செல்லப்படாத பிரயாணிகளிடமிருந்து, அவர்களின் பிரயாணத்துக்குரிய பயணக் கூலியைச் சபை அறவிடலாம்.

(2) கூறப்பட்ட சேவைகள் உள்ள பாதைகளில், பயணக்கூலி அறவிடவேண்டிய பயணக்கூலிக் கட்டங்களின் தூரம், கீழ்க்காணும் நிபந்தனைகட்கு உட்பட்டிருக்குமாயின், இத்தூரத்தை பஸ் பிரயாணிகளில் பெரும்பான்மையோருக்கு வசதியாயிருக்கக்கூடிய வகையில் சபை கணித்துக் கொள்ளலாம் :

(அ) கூறப்பட்ட பாதைகளில் வகுக்கப்பட்டிருக்கும் பயணக் கூலிக்கட்டங்களின் இடைத்தூரம், சராசரி ஒரு மைலுக்குக் குறையாது அல்லது ஒரு மைலுக்கு நியாயமானளவு கிட்டவாக இருக்க வேண்டும்.

(ஆ) ஒரு பாதையிலுள்ள தொடக்கப் பயணக் கூலிக் கட்டத்திலிருந்து அளந்து குறிக்கப்பட்ட 5 மைல் தூரத்திற்குள், இத்திட்டத்தின் 1 ம் அட்டவணையின் பந்தி ‘ A ’ ல் வகுக்கப்பட்ட பாதையில், முடிவு பெற்ற பயணக் கூலிக் கட்டங்கள் 5 க்கு மேற்படாதனவாயும், இத்திட்டத்தின் 1 ம் அட்டவணையின் பந்தி ‘ B ’ ல் வகுக்கப்பட்ட பாதையில், முடிவுபெற்ற பயணக்கூலிக் கட்டங்கள் 4 க்கு மேற்படாதனவாயும் இருக்க வேண்டும்.

**4. குழந்தைகளும் இளைஞர்களும்**

இத்திட்டத்தின் 3 வது பந்தியில் அவ்வாறு கூறப்பட்டிருப்பினும் :

(அ) பயணக்கூலி கொடுக்கும் ஒரு பிரயாணியோடு கூடச் செல்லும் 3 வயதுக்குக் கீழ்ப்பட்ட குழந்தையிடமிருந்து, யாது கட்டணமும் அறவிடக்கூடாது.

(ஆ) அதே பந்தியின் கீழ், 14 வயதுக்குக் கீழ்ப்பட்ட பிரயாணியிடமிருந்து அறவிடற்குரிய கட்டணம், இந்நிபந்தனை தவிர்த்து அறவிடப்படும் தொகையின் அரைவாசிக்கு மேற்படக்கூடாது.

**5. பருவச்சீட்டு உச்ச வீதம்**

(1) கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டிருந்தால், இத் திட்டத்தின் 3 ம் பந்தியின்படி கணிக்கப்பட்ட தொகையின் 80 சத வீதமான தொகையை, ஒரு குறிக்கப்பட்ட பாதையில், குறித்த இரண்டு குறிநிலைகளுக்கிடையில் ஒரு பிரயாணியை 52 ஒற்றைப் பிரயாணங்களில் ஏற்றிச் செல்வதற்குரிய பருவச்சீட்டுக் கட்டணமாகச் சபை அறவிடலாம் :

(அ) இத்திட்டத்தின் 3 ம் பந்தியின்படி கணிக்கப்பட்ட இவ்விரண்டு குறிநிலைகளுக்குமிடைக்குரிய ஒற்றைப் பயணக்கூலி ரூ. 2 க்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) இப்பந்தியின் நிபந்தனைகளுக்குட்பட வாங்கப்பெற்ற பருவச்சீட்டையுடையவர், 45 நாட்களுக்குள், இவ்விரண்டு குறிநிலைகளுக்கு மிடையில் செய்யும் பிரயாணம் 52 ஒற்றைப் பிரயாணங்களுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(2) இப்பந்தியின் 1 ம் உப பந்தியின் நிபந்தனைகளில் அவ்வாறு கூறப்பட்டிருப்பினும் 14 வயதுக்குட்பட்ட ஒரு பிரயாணியிடமிருந்து அறவிடப் பெறும் பயணக்கூலி, இப்பந்தியின் 1 ம் உப பந்தியின் கீழ் 44 ஒற்றைப் பிரயாணங்களுக்கு அறவிடற்குரிய தொகைக்கு அரைவாசிக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(3) இப்பந்தியின் 1 ம், 2 ம் உப பந்திகளிலும் இத் திட்டத்தின் 4 வது பந்தியிலும் அவ்வாறு கூறப்பட்டிருப்பினும், பருவச்சீட்டுப் பெறும் 18 வயதுக்குட்பட்ட மாணவன் ஒருவன் தன் கல்லூரி அதிபரிடமிருந்தோ அல்லது தலைமை ஆசிரியரிடமிருந்தோ கீழ்க்கண்டவாறு அவர்கள் கைச் சாத்திடப்பெற்ற சான்றிதழ் ஒன்றைக் கொடுத்தால், அவனிடமிருந்து, இப்பந்தியின், 2 ம் உப பந்தியின் கீழ் அறவிடற்குரிய கட்டணத்திற்கு மேற்படாத தொகையை பருவச் சீட்டுக்கட்டணமாக அறவிடலாம் :

(அ) அவன் வயது 14 வயதுக்கும் 18 வயதுக்கும் இடைப்பட்டது.

(ஆ) அவன் அந்நிலைய மாணவன்.

(4) இப் பந்தியின் 2 ம், 3 ம் உப பந்திகளுக்காக,

(அ) இப் பந்தியின் நிபந்தனைகளின்படி வாங்கப்பெற்ற பருவச் சீட்டையுடையவர், குறித்த ஒரு பாதையிலுள்ள இரண்டு குறிநிலைக்கட்டங்களுக்கிடையில், 30 நாட்களுக்கு, 44 க்கு மேற்படாத பிரயாணங்களைச் செய்வதற்கு உரிமையுள்ளவராவர்.

(ஆ) இவ்விரண்டு குறிநிலைகளுக்குமிடையில் பிரயாணம் செய்வதற்குரிய, இத்திட்டத்தின் 5 ம் பந்தியின்படி கணிக்கப்பட்ட ஒற்றைப் பயணக்கூலி 50 சதத்திற்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

## பகுதி III

**6. பயணப் பொதி**

(1) இத் திட்டத்தின் 3 ம், 4 ம், 5 ம் பந்திகளின் கீழ் அனுமதிக்கப்பெற்ற பயணக்கூலிக்கு, இலங்கைப் போக்குவரத்துச் சபையின் சேவைகளில் ஏற்றிச் செல்லப்படும் ஒரு பிரயாணி, மேலதிகமான கட்டணமில்லாது கீழ்க்காண்பனவற்றை, அவை கீழுள்ள நிபந்தனைகட்குட்பட்டிருக்குமாயின் தன்னோடு எடுத்துச் செல்லலாம் :

(அ) ஒரு பிரயாணி தானே கையில் எடுத்துச் செல்லக்கூடிய, மற்றைய பிரயாணிகளுக்கு வசதியீனமாயிராத சாதாரணப் பொதி, அல்லது சிறு சிப்பம் அல்லது பொருள்.

(ஆ) ஒரு சிறு நாய், பறவை அல்லது வேறு சிறிய சாதுவான மிருகம்.

(இ) பிரயாணி தன் வியாபாரத்துக்கோ, தொழிலுக்கோ பாவிக்கும், தயாரித்த அல்லது தயாரிக்கப்படாத உணவுப் பொருள் அல்லது குடிபானம்.

(ஈ) ஏதும் பண்ணைப் பறவை.

நிபந்தனைகள்—

(அ) கொண்டக்டரின் உத்தரவின்றி, நாயோ, பறவையோ அல்லது சிறு மிருகமோ எடுத்துச் செல்லப்படாது.

(ஆ) பஸ்களில் பிரயாணிகள் உட்கார்ந்து செல்வதற்குரிய ஆசனங்களில், எந்த ஒரு பயணப் பொதியோ, சிப்பமோ, பொருளோ, அல்லது நாயோ, மிருகமோ இருப்பதற்கு அல்லது மேடையை இன்றேல் நடைபாதையைத் தடைசெய்வதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

(இ) கொண்டக்டரால் காண்பிக்கப்படும் இடங்களிலேயே அப்படியான பயணப்பொதி, சிப்பம், நாய், பறவை, பொருள் இவைகளை வைத்து எடுத்துச் செல்லமுடியும்.

(2) இப் பந்தியின் 1 ம் உப பந்தியில் கூறப்பட்டிருக்கும், பயணப் பொதி, சிப்பம், பொருள், அல்லது உயிர்ப் பண்ணைப் பறவைகள், நாய், பறவை, இவற்றை வசதியாகக் கொள்ளக்கூடியனவற்றுள்ளும், இவற்றைக் கொண்டு செல்வதால் மற்றைய பிரயாணிகள் வசதியீனமடையாத வகையிலும் எடுத்துச் சென்றாலன்றி, பஸ்களில் எடுத்துச் செல்ல முடியாது.

(3) முன்கூறிய நிப்பந்தனைகளில் எப்பகுதியேனும், பெற்றோல், அல்லது வேறு எரிபொருள், திராவகங்கள், வெடிப் பொருள்கள் அல்லது வேறு அபாயகரமான அல்லது துர்நாற்றமளிக்கக்கூடிய பொருட்கள் அல்லது சவப் பெட்டியில் அடைக்கப்படாமலோ, அடைக்கப்பட்டோ இருக்கும் பிணம், அல்லது மதுவரிக் கட்டளைச் சட்ட விதிகளையும், தற்பொழுது அமுலிலிருக்கும் உணவுக்கட்டுப்பாட்டு விதிகளையும் மீறக்கூடிய பொருள் எவற்றையேனும், பஸ்களில் கொண்டு செல்வதற்கு அனுமதி தராது.

(4) ஒரு பிரயாணியால் எடுத்துச் செல்லப்படும் மேலதிகமான பயணப் பொதிக்கு, இத்திட்டத்தின், இரண்டாவது அட்டவணையின்படி ஆய்ந்தறிந்த தொகைக்கு மேற்படாத கட்டணத்தை அறவிடலாம்.

இப்பந்தியில், " மேலதிகமான பயணப் பொதி " என்ற சொற்றொடர், ஒரு பிரயாணியோடு சம்பந்தப்பட்ட, நிறையில் 28 றுத்தல்களுக்கு மேற்பட்டு 84 றுத்தல்களுக்கு மேற்பட்டிராத சாதாரண பயணப் பொதியை அல்லது உப பந்தி 1 ன் கீழ் மேலதிகமான கட்டணமில்லாது ஒரு பிரயாணியால் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாத பொருளைக் கருதும்.

## பகுதி IV

### பலவினமானவையும் பொதுவானவையும்

**7. பலவின்மான சேவைகளும், வசதிகளும்**

இலங்கைப் போக்குவரத்துச் சபை, பலவினமான சேவைகளுக்கும், கீழே கூறப்பட்ட வசதிகளுக்கும் அறவிடக்கூடிய உச்சக் கட்டணங்கள் பின்வருமாறு :

(அ) குறித்த பிரயாணிகளுக்கு விசேஷமாக ஏற்படுத்திய பஸ், அல்லது ஒப்பந்தக் கேள்வில் உபயோகப்படுத்தப்படும் பஸ் :

பஸ்ஸிலுள்ள ஆசனங்களின் தொகைக்கு ஏற்ப மைல் ஒன்றுக்கு ஒரு பிரயாணிக்கு 5 சத வீதமாக.

(ஆ) ஏதும் ஓட்டப் பந்தய நிகழ்ச்சி, விளையாட்டு நிகழ்ச்சி, களியாட்டம், பொருட்காட்சி, அல்லது விசேஷ சந்தர்ப்பம் இவை சம்பந்தமாக விசேஷமாக ஏற்படுத்திய பஸ்ஸை உபயோகப்படுத்துவது :

ஒரு பிரயாணிக்கு, மைல் ஒன்றுக்கு 5 சத வீதமாக.

(இ) சபை பஸ் என விளம்பரம் செய்யும், குறைநிரப்புக் கட்டணங்கள் கொடுத்தே பிரயாணிகள் பிரயாணம் செய்யும் பஸ்ஸின் உபயோகம் :

ஒரு பிரயாணிக்கு மைல் ஒன்றுக்கு 5 சத வீதமாக.

(ஈ) ஆசனங்களை முன்கூட்டி ஒதுக்குதல் :

ஆசனம் ஒன்றிற்கு 25 சதம்.

(உ) முன்னதாகவோ அல்லது தனியாகவோ ஏற்றிச்செல்லப்படும் பயணப் பொதி :

2 ம் அட்டவணையிலுள்ள அதே வரிகள்.

(ஊ) பயணப் பொதியறை அல்லது விட்டுப்போகப்பட்ட பயணப் பொதிக்கான வசதிகள் :

நாளொன்றுக்கு ஒரு பார்சலுக்கு 10 சதம்.

8 (1) இத்திட்டத்தில் குறிப்பிடப்படாத ஏதாவது சேவைகளினதும், வசதிகளினதும் உபயோகத்திற்கு இலங்கைப் போக்குவரத்துச் சபை, தங்களால் நியாயமானதெனத் தீர்மானிக்கப்பட்ட செலவை அறவிடலாம்.

(2) இப் பந்தியின் 1 ம் உப பந்தியின் நிபந்தனைகளின் கீழ் இலங்கைப் போக்குவரத்துச் சபை அறவிடும், அல்லது அறவிட உத்தேசிக்கும் கட்டணங்கள் நியாயமானவையா அல்லது நியாயமற்றவையா என்பதை, கட்டணம் கட்ட வேண்டியவர், அல்லது இலங்கைப் போக்குவரத்துச் சபை தாக்கல்செய்யும் மனுவின் பேரில், பயணக் கூலிச் சபை தீர்மானிக்கும்.

9. **நியதிகளும், நிபந்தனைகளும்**

இலங்கைப் போக்குவரத்துச் சபை, தங்களால் நியாயமானதெனத் தீர்மானிக்கப்பெற்ற நியதிகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைய இத் திட்டத்தோடு தொடர்பு கொண்ட சேவைகளையோ, வசதிகளையோ உபயோகப்படுத்தலாம். எந்த ஒரு நியதியோ, நிபந்தனையோ :

(அ) இத்திட்டத்தின் நிபந்தனை எதற்கும் மாறுபாடாயிருந்தால் ;

(ஆ) கூறப்பட்ட சேவைகளையும், வசதிகளையும் உபயோகப்படுத்தும் ஒருவரின் மரணத்துக்கோ அல்லது அவர் காயமடைவதற்கோ உள்ள பொறுப்பை நேர்முகமாகவோ அல்லது மறைமுகமாகவோ கட்டுப்படுத்துவதாய் இன்றேல் நீக்குவதாய் இருந்தால் ; அல்லது

(இ) அப்படியான பொறுப்பை அமுல் நடத்தும் முறையை அல்லது அதற்கு வேண்டிய கால எல்லையை நேர்முகமாகவோ அன்றி முறைமுகமாகவோ விதிக்கும் நோக்கமுடையதாயிருந்தால், அது பயனற்றதாயும், வறிதாயுமாகிவிடும்.

(2) இப்பந்தியின் 1 ம் உபபந்தியால் அளிக்கப்படும் அதிகாரங்களைச் சபை உபயோகப்படுத்தும் வேளைகளில் சபையால் விதிக்கப்பட்ட அல்லது விதிக்கப்படவிருக்கும் எந்த ஒரு நியதியோ, நிபந்தனையோ நியாயமானவையா என்பதைப் பயணக் கூலிச் சபை தீர்மானிக்கும்.

10. **கட்டணமறவிடக்கூடிய தூரம் :**

3 ம் பந்தியின்கீழ் அனுமதிக்கப்பெற்ற உச்சக் கட்டணம் அறவிடும் பிரயாணத்தைப் பொறுத்தவரை, அந்தப் பிரயாணத்திற்காக அறவிடக் கூடிய பயணக் கூலிக்குரிய தூரம் :

(அ) பிரயாணி வாகனத்தில் ஏறுகின்ற பயணக்கூலிக் கட்டக் குறிநிலைக்கும், அல்லது பயணக்கூலிக் கட்டக் குறிநிலை அல்லாத இடத்தில் பிரயாணி வாகனத்தில் ஏறினால் அவ்விடத்திற்கு அடுத்து முன்னதாகவுள்ள பயணக்கூலிக் கட்டக் குறிநிலைக்கும்,

(ஆ) பிரயாணி வாகனத்தை விட்டு இறங்குகின்ற பயணக் கட்டக்குறிநிலைக்கும் அல்லது பயணக்கூலிக் கட்டக் குறிநிலை அல்லாத இடத்தில் பிரயாணி வாகனத்தை விட்டிறங்கினால், அவ்விடத்திற்கு அடுத்து உள்ள பயணக்கூலிக் கட்டக் குறிநிலைக்கும் இடையே உள்ள தூரமாயிருக்க வேண்டும்.

11. **பகுதிகள்**

(1) இத்திட்டத்தின் எல்லா நோக்கங்களுக்கும் ஒரு மைலின் ½ மைலுக்கு மேற்படாத பகுதிகள் ½ மைல் எனக் கொள்ளப்பட வேண்டும். ஒரு மைலின் ½ மைலுக்கு மேற்பட்ட பகுதிகள் ஒரு மைல் எனக் கொள்ளப்படவேண்டும்.

(2) (அ) ஒரு குறித்த பிரயாணத்திற்கு அறவிடவேண்டுமென இத்திட்டத்தால் அனுமதிக்கப்பெற்ற உச்சக் கட்டணத்தையும் (இத்திட்டத்தின் 3 ம் பந்தியின் கீழ் அனுமதிக்கப்பெற்ற உச்சக் கட்டணமும் உள்பட),

(ஆ) இத்திட்டத்தின் 6 ம் பந்தியின் கீழ் அனுமதிக்கப்பெற்ற மேலதிகமான பயணப் பொதிக்குரிய உச்சக் கட்டணத்தையும்,

(இ) இத் திட்டத்தின் 7 ம் பந்தியின் கீழ் அனுமதிக்கப்பெற்ற மேலதிகமான பயணப் பொதிக்குரிய கட்டணத்தையும் தீர்மானிக்கும் பொழுது 5 சதத்தின் பகுதிகளில் 2½ச் சதத்திற்கு மேற்பட்டவை 5 சதம் எனக் கொள்ளப்பட வேண்டும். இப் பகுதிகளில் 2½ச் சதத்திற்குக் குறைந்தவை புறக்கணிக்கப்படவேண்டும்.

(3) இத் திட்டத்தின் 6 ம் பந்தியின்படி உள்ள உச்சக் கட்டணத்தை, பிரயாணிகளின் பயணப் பொதி விடயமாகத் தீர்மானிக்கும் பொழுது ஒரு ருத்தலின் பகுதிகள் ஒரு ருத்தல் எனவே கொள்ளப்படவேண்டும்.

## பகுதி V

12. **வெளியீடுகள்**

சபை, அதன் காரியாலயத்திலும், ஒவ்வொரு பிரதேச முகாமைக்காரர், மாவட்ட முகாமைக்காரர், டிப்போ முகாமைக்காரர் காரியாலயத்திலும் இத்திட்டத்தின் நகல் ஒன்றைக் காட்சிப் பொருளாக வைத்திருக்க வேண்டும். காரியாலய நேரங்களில் யாராவது இதைக் கேட்டால், அவர்கள் பார்வையிடுவதற்கு இது கொடுக்கப்பட வேண்டும்.

13. சபை, ஒவ்வொரு டிப்போவிலும், ஒவ்வொரு பஸ் நிலையத்திலும், அந்த டிப்போவினதோ, பஸ் நிலையத்தினதோ பொறுப்புக்குரிய பாதையில் உள்ள பயணக் கூலிக் கட்டங்களைக் கொண்டதும், ஒரு பிரயாணத்திற்காக இத்திட்டத்தின் 2 வது பகுதியின்கீழ் அறவிடக்கூடிய உச்சப் பயணக்கூலிகளைக் காட்டுவதுமான ஒரு நிரலையோ, நிரல்களையோ பொது மக்களின் பார்வைக்காக வைத்திருக்க வேண்டும். இலங்கைப் போக்குவரத்துச் சபையால் அறவிடப்படும் உள்ளபடியான பயணக்கூலி, உச்சப்பயணக் கூலியை விடக் குறைவாக இருந்தால் அவ் உள்ளபடியான பயணக்கூலிகளைக் காட்டுகின்ற நிரல் ஒன்று பொது ஜனங்களின் பார்வைக்காக வைத்திருக்கப்பட வேண்டும்.

## அட்டவணை 1

### ஒரு மைலுக்குரிய அதி உயர்ந்த கட்டணங்கள்

(A) பின்வரும் பகுதிகளுக்குள்ளமைந்த எப்பாதையிலும் ஒரு பிரயாணியை ஏற்றிச்செல்வதற்கு மைல் ஒன்றுக்கு ஐந்து சதம் :—

(1) கண்டி அரசிறை மாவட்டம்.

(2) நுவரெலியா அரசிறை மாவட்டம்.

(3) வெரலந்த-கலேவெல-உஸ்ஸெற்றுவ-நஉல-எலகர ரோட்டிற்குத் தெற்கேயுள்ள மாத்தளை அரசிறை மாவட்டத்தின் பகுதி.

(4) ரம்புக்கணை-கேகாலை-கலிகொமுவை-உந்துகொடை-தெறனியகலை-பறக்கடுவை ரோட்டிற்கு மேற்கேயுள்ள பகுதி தவிர்ந்த கேகாலை அரசிறை மாவட்டம்.

(5) பறக்கடுவை-ரத்தினபுரி ரோட்டிற்குக் கிழக்கேயும், இங்கிரியா-ரத்தினபுரி ரோட்டிற்குத் தெற்கேயும், கிங்குற-எம்பிலிப்பிட்டியா-வியனெகம ரோட்டிற்கு வடக்கேயுமுள்ள ரத்தினபுரி அரசிறை மாவட்டத்தின் பகுதி.

(6) பதுளை அரசிறை மாவட்டத்தின் கல்பை-கல்துமுல்லை-வெள்ளவாய ரோட்டிற்குத் தெற்கேயும், மொனறாகலை-பிபிலை ரோட்டிற்குக் கிழக்கேயுமுள்ள பகுதிகள் தவிர்ந்த வெள்ளவாய-மொனறாகலை ரோட்டிற்கு வடக்கேயும், அநுத்நுவரை-பிபிலை ரோட்டிற்கு மேற்கேயுமுள்ள பகுதிகள்.

(B) மேற்காணும் பந்தி (A) ல் குறிக்கப்பட்டிராத பகுதிகளிலுள்ள எப்பாதையிலும் ஒரு பிரயாணியை ஏற்றிச் செல்வதற்கு மைல் ஒன்றுக்கு நான்கு சதம்.

## அட்டவணை 2

### மேலதிகமான பயணப் பொதி ஏற்றியிறக்கல்

ஒரு பிரயாணியால் கட்டணமில்லாது இலவசமாகக் கொண்டு செல்லக்கூடிய 28 றுத்தலுக்கு மேலதிகமான ஒவ்வொரு 28 றுத்தலுக்கும் அல்லது அதன் பகுதிகளுக்கும் அறவிடவேண்டிய கட்டணம், ஒரு பிரயாணியின் பயணக்கூலியின் மூன்றில் ஒரு பங்கிற்குச் சமமான தொகையாயிருக்க வேண்டும். (இந்தத் தொகைக் கணிப்பின் நோக்கங்களுக்கு 5 சதத்தின் பகுதிகள், 5 சதமாகக் கொள்ளப்படவேண்டும்.)

ஒவ்வொரு 28 றுத்தலுக்கோ அதன் பகுதிகளுக்கோ கூறப்பட்ட முறையின் அடிப்படையில் கணிக்கப்பெறும் கட்டணங்களின் தொகைக் கணிப்புப் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :

| பிரயாணியின் பயணக்கூலி | | | | | கொடுபடவேண்டிய பயணப் பொதிப் பயணக்கூலி |
|---|---|---|---|---|---|
| ரூ. ச. | | ரூ. ச. | | | ரூ. ச. |
| 0 05 | லிருந்து | 0 30 வரை | .. | .. | 0 10 |
| 0 35 | ,, | 0 45 ,, | .. | .. | 0 15 |
| 0 50 | ,, | 0 60 ,, | .. | .. | 0 20 |
| 0 65 | ,, | 0 75 ,, | .. | .. | 0 25 |
| 0 80 | ,, | 0 90 ,, | .. | .. | 0 30 |
| 0 95 | ,, | 1 05 ,, | .. | .. | 0 35 |
| 1 10 | ,, | 1 20 ,, | .. | .. | 0 40 |
| 1 25 | ,, | 1 35 ,, | .. | .. | 0 45 |
| 1 40 | ,, | 1 50 ,, | .. | .. | 0 50 |
| 1 55 | ,, | 1 65 ,, | .. | .. | 0 55 |
| 1 70 | ,, | 1 80 ,, | .. | .. | 0 60 |
| 1 85 | ,, | 1 95 ,, | .. | .. | 0 65 |
| 2 00 | ,, | 2 10 ,, | .. | .. | 0 70 |
| 2 15 | ,, | 2 25 ,, | .. | .. | 0 75 |
| 2 30 | ,, | 2 40 ,, | .. | .. | 0 80 |
| 2 45 | ,, | 2 55 ,, | .. | .. | 0 85 |
| 2 60 | ,, | 2 70 ,, | .. | .. | 0 90 |
| 2 75 | ,, | 2 85 ,, | .. | .. | 0 95 |
| 2 90 | ,, | 3 00 ,, | .. | .. | 1 00 |
| 3 05 | ,, | 3 15 ,, | .. | .. | 1 05 |
| 3 20 | ,, | 3 30 ,, | .. | .. | 1 10 |
| 3 35 | ,, | 3 45 ,, | .. | .. | 1 15 |
| 3 50 | ,, | 3 60 ,, | .. | .. | 1 20 |
| 3 65 | ,, | 3 75 ,, | .. | .. | 1 25 |
| 3 80 | ,, | 3 90 ,, | .. | .. | 1 30 |
| 3 95 | ,, | 4 05 ,, | .. | .. | 1 35 |
| 4 10 | ,, | 4 20 ,, | .. | .. | 1 40 |
| 4 25 | ,, | 4 35 ,, | .. | .. | 1 45 |
| 4 40 | ,, | 4 50 ,, | .. | .. | 1 50 |
| 4 55 | ,, | 4 65 ,, | .. | .. | 1 55 |
| 4 70 | ,, | 4 80 ,, | .. | .. | 1 60 |
| 4 85 | ,, | 4 95 ,, | .. | .. | 1 65 |
| 5 00 | ,, | 5 10 ,, | .. | .. | 1 70 |
| 5 15 | ,, | 5 25 ,, | .. | .. | 1 75 |
| 5 30 | ,, | 5 40 ,, | .. | .. | 1 80 |
| 5 45 | ,, | 5 55 ,, | .. | .. | 1 85 |
| 5 60 | ,, | 5 70 ,, | .. | .. | 1 90 |
| 5 75 | ,, | 5 85 ,, | .. | .. | 1 95 |
| 5 90 | ,, | 6 00 ,, | .. | .. | 2 00 |

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது